DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.193/2018**

Deposition of :PW - 6

| | | |
|---|---|---|
| Name | : திரு.பெரியசாமி | Caste: |
| Father's Name | : திரு. தர்மலிங்கம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றவாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 21st day of March -2023.

**Accused present.**

**முதல் விசாரணை**

நான் வாழப்பாடி தாலுக்கா மண்ணாய்க்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்கிறேன். இறந்து போன முருகேசன் எனது பங்காளி அண்ணன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் முருகேசனின் மனைவி. 25.06.2017 அன்று முருகேசன் இறந்துவிட்டாதாக கேள்விப்பட்டேன். முருகேசனின் வீட்டிற்கு அதிகாலை 03.30 மணிக்கு சென்றேன். அங்கு போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அதற்காக என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். என்னிடம் ஒரு வெள்ளைப் பேப்பரில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். 2 கையெழுத்துக்கள் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். 2வது சாட்சியாக கும்பலிங்கம் என்பவர் கையொப்பம் செய்தார். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5. முருகேசனுக்கு குடிப்பழக்கம் உண்டு.

அவருக்கு குடிப்பதற்கு பணம் இல்லை என்றால் அவரது மனைவி குழந்தைகளிடம் சண்டை செய்வார். முருகேசன் இறந்த அன்றும் அதே போன்று வாக்குவாதம் ஏற்பட்டிருக்கிறது, அந்த வாக்குவாதத்தின் போது எதிரி கோபம் அடைந்து முருகேசனை கழுத்தை நெறிந்து கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். பிரதேத்தை பிரேத பரிசோதனைக்காக கொண்டு போய் விட்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அதிகாலை 03.00 மணிக்கு முருகேசன் வீட்டிற்கு சென்றேன். போலீசார் வரைபடம் வரைந்தபோது அதிகாலை 03.30 மணியிருக்கும். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் சொன்னதின் அடிப்படையில்தான் எதிரி முருகேசனை கழுத்தை நெறித்து கொன்றுவிட்டதாக தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் சொன்னது போல் எதிரி முருகேசனை கழுத்தை நெறித்து கொலை செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறு விசாரணை இல்லை**

Sd/- **G. Sri Rama Jeyam)**
III Additional District Judge,
Salem.